496—

சோளிங்கர் தாலுகா ஏற்படுத்துதல்

*4721 திரு ஏ. எம். முனிரத்தினம்:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சோளிங்கரை மையமாகக் கொண்டு தாலுகா ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*திரு. ஏ.எம். முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பிர்கா, வானவரம் பிர்கா, காவேரிப்பாக்கம் பிர்கா ஆகிய 3 பிர்காக்களை இணைத்து, சோளிங்கரை மையமாக வைத்து ஒரு தாலுகா ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிலை முன்பே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 497, டாக்டர் க.கோபால், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர். முற்பகல் 9.40

497—

நன்னிலத்தில் மாணவர் விடுதி

*3288—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நன்னிலத்தில் பிற்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,